முற்றிலும் தோல்வியுற்ற பா.ஜ.க. அரசை எதிர்கொள்ள நாடாளுமன்றத்தில் “இந்தியா” கூட்டணியுடன் இணைந்து

ஜனநாயகத்தைக் காத்திடுவோம்!

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற கழக எம்.பி.க்கள் கூட்டத்தில் தீர்மானம்!

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், தி.மு.க. மக்களவை – மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம், நேற்று (16.9.2023), காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நடைபெற்றது. அப்போது கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., மற்றும் கழக மக்களவை – மாநிலங்களவை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை, செப். 17-

“முற்றிலும் தோல்வியுற்ற ஒன்றிய பா.ஜ.க. அரசை எதிர்கொள்ள ‘இந்தியா’ கூட்டணியுடன் இணைந்து நாடாளுமன்றத்தில் ஜனநாயகத்தைக் காத்திடுவோம்” என்று கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பாராட்டு!

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் பிறந்த நாளில் – தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டில், வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கத்தக்க “கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை” துவக்கி வைத்து – ஒரு கோடிக்கும் மேற்பட்ட மகளிரின் குடும்பங்களில் மகிழ்ச்சியை ஏற்படுத்திய தமிழ்நாட்டின் முதலமைச்சரும், திராவிட முன்னேற்றக் கழக தலைவருமான தளபதி அவர்களுக்கு இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நன்றியை – பாராட்டுதலை தெரிவித்துக் கொள்கிறது.

காவிரி நதிநீர் பிரச்சினையில் நடுவர் மன்றமும், உச்சநீதிமன்றமும் அளித்துள்ள தீர்ப்புகளை பொருட்படுத்தாமல், மழை குறைபாட்டைக் காரணம் காட்டி, தமிழ்நாட்டின் பங்கான நீரை கர்நாடக மாநிலம் விடுவிக்காததால் குறுவைப் பயிர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, சம்பா பயிரும் கேள்விக்குறியாகி உள்ளது. எனவே உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி தமிழகத்திற்குச் சேர வேண்டிய நீரை உடனடியாக விடுவிக்குமாறு கர்நாடக அரசுக்கு ஒன்றிய அரசு வலியுறுத்திட வேண்டும் எனக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு ஒன்றிய அரசு தடைக்கல்!

ஒன்றியத்தில் பா.ஜ.க. அரசு பொறுப்பேற்றதிலிருந்து, தமிழ் நாட்டிற்கான திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை. மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையை முடக்கி வைத்திருப்பது போல் – இரண்டாவது கட்ட சென்னை மெட்ரோ ரயில் பணிக்கான நிதி ஒதுக்கீட்டையும் செய்யவில்லை. முதலமைச்சர் அவர்கள் பிரதமரின் முதல் சந்திப்பிலேயே வலியுறுத்தியும், இன்றுவரை ஒன்றிய அரசின் அமைச்சரவைக் கூட்டத்தில் வைக்காமல் இழுத்தடித்து, தமிழ் நாட்டு உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு ஒன்றிய அரசு தடைக்கல்லை ஏற்படுத்தி வருகிறது.

பா.ஜ.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்ட நீட் தேர்வால், தமிழ்நாட்டில் தற்கொலைகள் அதிகரித்து வருகிறது. தமிழ்நாடு சட்டமன்றமே நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளிக்க மசோதாவை இரண்டு முறை ஒருமனதாக நிறைவேற்றி, குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்த பிறகும் ஒன்றிய அரசு அந்த மசோதாவிற்கு இன்னும் ஒப்புதல் அளிக்காமலேயே இருப்பது பா.ஜ.க. ஆட்சி தமிழ்நாட்டிற்கு செய்து வரும் மாபெரும் துரோகம். நீட் தேர்வு மசோதாவிற்கு உடனடியாக ஒப்புதலை அளித்திட தொடர்ந்து நாடாளுமன்றத்தில் தி.மு.க. குரல் எழுப்பும்.

> **ஒன்றியத்தில் பா.ஜ.க. அரசு பொறுப்பேற்றதிலிருந்து, தமிழ் நாட்டிற்கான திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை. மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையை முடக்கி வைத்திருப்பது போல் - இரண்டாவது கட்ட சென்னை மெட்ரோ ரயில் பணிக்கான நிதி ஒதுக்கீட்டையும் செய்யவில்லை. முதலமைச்சர் அவர்கள் பிரதமரின் முதல் சந்திப்பிலேயே வலியுறுத்தியும், இன்றுவரை ஒன்றிய அரசின் அமைச்சரவைக் கூட்டத்தில் வைக்காமல் இழுத்தடித்து, தமிழ்நாட்டு உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு ஒன்றிய அரசு தடைக்கல்லை ஏற்படுத்தி வருகிறது.**

மகளிர் மசோதாவை நிறைவேற்ற வலியுறுத்தல்!

பெண்ணுரிமை வழங்குவதில் தலைசிறந்த மாநிலமாக மட்டுமின்றி “கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை” பேரறிஞர் அண்ணா பிறந்த நாளன்று செயல்படுத்தியுள்ள சூழலில், நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களில் மகளிருக்கு 33 விழுக்காடு பிரதிநிதித்துவம் அளிக்கும் மசோதா பற்றி வாயே திறக்காமல் காலத்தை கழித்துள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், இன்று அவர் வழியில் செயல்படும் முதலமைச்சர் அவர்களும் மகளிர் மசோதாவை நிறைவேற்றக் கோரி எண்ணற்ற முறை கோரிக்கைகள் வைத்தும் அதன் மீதான விவாதத்திற்கு கூட பா.ஜ.க. அரசு தயாராக இல்லை. எனவே இந்த சிறப்புக் கூட்டத்தில் நாடாளு மன்றத்திலும், சட்டமன்றங்களிலும் 33 விழுக்காடு மகளிருக்கு பிரதிநிதித்துவம் அளிக்கும் மசோதாவை நிறைவேற்ற வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் வலுவாக குரல் எழுப்ப இக்கூட்டம் முடிவு செய்துள்ளது.

இந்தியாவிற்கே முன்னோடியாக சமூகநீதிக்கான குரல் எழுப்பும் நமது இயக்கம், இச்சிறப்பு கூட்டத் தொடரில், **“மண்டல் கமிஷன் பரிந்துரைப்படி ஒன்றிய அரசின் துறைகளில் முழு ஒதுக்கீட்டை செயல்படுத்த வேண்டும்”, “அரசு துறைகளில் பதவி உயர்விலும் இடஒதுக்கீடு வழங்க வேண்டும்”, “தனியார் வேலைவாய்ப்புகளில் இட ஒதுக்கீட்டை அமல்படுத்திட வேண்டும்”, “பிற்படுத்தப் பட்டோருக்கு உள்ள கிரீமிலேயரை 25 லட்சமாக உயர்த்த வேண்டும்”, “உயர்நீதிமன்ற, உச்சநீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில் சமூகநீதி அடிப்படையில் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும்”** உள்ளிட்ட கோரிக்கைகளோடு “இட ஒதுக்கீட்டிற்கு உள்ள 50 விழுக்காடு உச்சவரம்பு நீக்கப்படும்” மசோதாவையும் இந்த சிறப்பு நாடாளுமன்றக் கூட்டத்திலேயே கொண்டு வந்து நிறைவேற்ற வலியுறுத்துவோம்.

ஒன்றிய பா.ஜ.க. அரசால் சமீபத்தில் அறிவிக்கப்பட்ட “விஸ்வகர்மா யோஜானா” திட்டம், குலத் தொழிலை ஊக்குவிக்கும் வகையிலான நடைமுறைகளை வகுத்து, அதிலும் குறிப்பாக 18 வயது நிறைந்துள்ளவர்களை கல்லூரிக்கு செல்லவிடாமல், பரம்பரை தொழிலையே செய்யத் தூண்டும்குலத்தொழிலை மேலோங்கச் செய்யும் திட்டமிட்ட சூழ்ச்சி. இத்திட்டத்தையும் எதிர்த்து நாடாளுமன்றத்தில் கழக உறுப்பினர்கள் குரலெழுப்புவார்கள்.

‘இந்தியா’ கூட்டணிக்கு அஞ்சி பெயர் மாற்றம்!

எங்கள் ஆட்சி காலத்தில் நாட்டையே மாற்றுவோம் என பேசி வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசு, தற்போது “இந்தியா” கூட்டணிக்கு அஞ்சி “பாரத்” என்று நாட்டின் பெயரை மாற்றுவதிலேயே உன்னிப்பாக இருக்கிறது.

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் முற்றிலும் தோல்வியுற்ற ஒன்றிய பா.ஜ.க. அரசை, நாடாளுமன்றத்தில் “இந்தியா” கூட்டணி கட்சிகளுடன் ஒருங்கிணைந்து எதிர்கொண்டு இந்திய ஜனநாயகத்தை காத்திட இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1000 பூங்கொத்துக்கள் மற்றும் 1000 கிலோ மலர்கள்!

மகளிர் உரிமைத் தொகை திட்டத்திற்கு நன்றி தெரிவித்த 1000 மாணவிகள்!

சென்னை எவர்வின் பள்ளியில் பிரமாண்டம்! அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்பு!

தமிழக அரசின் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தை பாராட்டும் விதமாக சென்னை கொளத்தூர் எவர்வின் வித்தியாஷ்ரம் பள்ளியில் நேற்று, சனிக்கிழமை, பிரமாண்ட நிகழ்ச்சி நடைபெற்றது. விழாவில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர் பாபு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இதில் 1000 உயர் வகுப்பு மாணவிகள் பங்கேற்றனர்.

பள்ளி மைதானத்தில் 10,000 சதுர அடி பரப்பில் ரோஜா மலர்கள் தூவப்பட்டிருந்தன. இதன் மையப் பகுதியில் 1000 மாணவிகள் கையில் பூங்கொத்துக்களுடன் 1000 என்ற எண்ணை வடிவமைத்து அமர்ந்திருந்தனர். இவர்கள் பூங்கொத்துக்களை பல்வேறு கோணங்களில் அசைத்தது கண்ணை கவரும் வகையில் இருந்தது. மேலும் “கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் முதல்வருக்கு நன்றி” என்ற வாசகங்களை 1000 கிலோ சாமந்தி மற்றும் ரோஜா மலர்களைக் கொண்டு வடிவமைத்திருந்தனர்.

இதுபற்றி 9ம் வகுப்பு மாணவி நந்தினி கூறுகையில் “இந்த திட்டம் மூலம் எனக்குத் தெரிந்த பல பெண்கள் பயனடைந்து உள்ளனர். அவர்கள் அளவற்ற மகிழ்ச்சியடைந்து தமிழக அரசையும் முதலமைச்சரையும் ‘பாராட்டி வருகின்றனர். இதன் காரணமாகவே அந்த ஒரு கோடி பெண்களின் சார்பாக நாங்கள் இந்த பிரமாண்ட நிகழ்ச்சியை நடத்தியிருக்கிறோம்” என்றார்.

இதேபோல 8ம் வகுப்பைச் சேர்ந்த அ. சாம்பவி “இன்று தமிழ் நாடே மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி உள்ளது. இது பெண் உரிமையை நிலை நிறுத்துவதற்கும் அவர்களது சிறு சிறு செலவுகளுக்கு பிறரை சார்ந்திராமல் இருப்பதற்கும் பெரிதும் உதவும். இதனால் முதலமைச்சரை நேரில் சந்தித்து பாராட்ட விரும்புகிறோம்” என்று தன் ஆவலை வெளிப்படுத்தினார்.

நிகழ்ச்சியில் எவர்வின் பள்ளிக் குழும சி.இ.ஓ மகேஸ்வரி, மூத்த முதல்வர் புருஷோத்தமன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.